# வண்ணாரப்பேட்டை-டி.எம்.எஸ். இடையே மெட்ரோ ரயில் சேவை

## பிரதமர் மோடி இன்று தொடங்கி வைக்கிறார்



வண்ணாரப்பேட்டை– டிஎம்எஸ் இடையேயான புதிய வழித்தட மெட்ரோ ரயில் சேவை ஞாயிற்றுக்கிழமை தொடங்கப்பட உள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகள் குறித்து சனிக்கிழமை நேரில் ஆய்வு செய்த தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத். உடன், மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குநர் பவன்குமார் பன்சால் உள்ளிட்ட அதிகாரிகள்.

**சென்னை, பிப். 9:** சென்னை வண்ணாரப்பேட்டை - டி.எம்.எஸ் இடையே புதிய வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி திருப்பூரில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (பிப்.10) பிற்பகல் காணொலி காட்சி மூலமாக தொடங்கி வைக்கிறார்.

மக்களின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்யும் வகையில், 45.01 கி.மீ. தூரத்துக்கு சென்னையில் மெட்ரோ ரயில் திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் இறுதி வழித்தடமான வண்ணாரப்பேட்டை–டி.எம்.எஸ். வரையிலான 10 கி.மீட்டர் தூரத்துக்கு நடந்து வந்த சுரங்கப்பாதை பணிகள் முடிந்தது. இதையடுத்து, இந்த புதிய வழித்தடத்தில் மெட்ரோ ரயில்வே பாதுகாப்பு ஆணையர் மனோகரன் ஜனவரி 19–ஆம் தேதி முதல் 21–ஆம் தேதி வரை 3 நாள்கள் ஆய்வு செய்து, சேவையை தொடங்க சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகத்துக்கு ஒப்புதல் அளித்தார். இதைத் தொடர்ந்து, வண்ணாரப்பேட்டை - டி.எம்.எஸ். இடையே புதிய வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை தொடங்குவதற்கான ஏற்பாடுகளை மெட்ரோ ரயில் நிர்வாகம் செய்து வந்தது.

இந்நிலையில், வண்ணாரப்பேட்டை - டி.எம்.எஸ். இடையே புதிய வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி திருப்பூரில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (பிப்.10) பிற்பகல் 3.15 மணிக்கு காணொலி காட்சி மூலமாக தொடங்கி வைக்கிறார். இந்த நிகழ்ச்சியில், தமிழக முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, மத்திய நிதித்துறை இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், தமிழக துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், மீன் வளத் துறை அமைச்சர் டி.ஜெயக்குமார், தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

**அமைச்சர் ஆய்வு:** இதற்கிடையில், தமிழக தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் சென்னை மெட்ரோ ரயில் நிலையத்தில் சனிக்கிழமை ஆய்வு செய்தார். வண்ணாரப்பேட்டை–ஏஜி. டி.எம்.எஸ் இடையே புதிய வழித்தடத்தில் பயணிகளுக்கு செய்யப்பட்டுள்ள சேவைகள் மற்றும் தொடக்க விழா ஏற்பாடுகள் ஆகியவற்றை ஆய்வு செய்தார். அப்போது, சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகத்தின் மேலாண்மை இயக்குநர் பங்கஜ் குமார் பன்சால் உடனிருந்தார். தொடக்க விழாவுக்கான ஏற்பாடுகள் குறித்து மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரிகளிடம் அமைச்சர் எம்.சி.சம்பத் கேட்டறிந்தார்.